# 2023 பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கான உங்கள் வழிகாட்டி.



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

E231 06/23 Tamil

## 2023-இல் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ளுதல்

### நீங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதையும், உங்கள் தரவில் உங்கள் சமீபத்திய விவரங்கள் உள்ளதையும் உறுதிப்படுத்தவும்.

வாக்களிக்க, நீங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர், ஒரு நியூசிலாந்து குடிமகன் அல்லது ஒரு நிரந்தரக் குடியிருப்பாளராக இருந்து, உங்கள் வாழ்க்கையில் எப்போதாவது நியூசிலாந்தில் தொடர்ந்து 12 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு வசித்திருந்தால் நீங்கள் பதிவு செய்ய வேண்டும்.

### உங்கள் விவரங்களை இணையவழியாகப் பதிவு செய்தல், சரிபார்த்தல் அல்லது நிகழ்நிலைப்படுத்துதல்

உங்களுடைய நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து கடவுச்சீட்டு அல்லது RealMe சரிபார்க்கப்பட்ட அடையாளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உங்கள் விவரங்களை பதிவு செய்வது, சரிபார்ப்பது அல்லது நிகழ்நிலைப்படுத்துவது எளிது.

- **vote.nz இணையத்தளத்திற்குச் சென்றிடுங்கள்**
- **0800 36 76 56 என்ற எண்ணை அழைத்திடுங்கள்**
- **உங்கள் பெயர் மற்றும் முகவரியை 3676 என்ற எண்ணுக்கு இலவச உரைச் செய்தி அனுப்பிடுங்கள்**

### உங்கள் EasyVote பேக்

நீங்கள் செப்டம்பர் 10 ஞாயிற்றுக்கிழமைக்குள் பதிவு செய்யப்பட்டால், ஒரு EasyVote பேக்கை மின்னஞ்சலில் நீங்கள் பெறுவீர்கள்.

நீங்கள் எப்போது வாக்களிக்கலாம் என்பதையும், யாருக்கு வாக்களிக்கலாம் என்பதையும் உங்கள் EasyVote பேக் உங்களுக்குத் தெரிவிக்கும். உங்கள் பேக்கில் உங்களுக்கென தனிப்பயனாக்கப்பட்ட EasyVote அட்டையும் இருக்கும், இது வாக்களிப்பதை எளிதாக்கும். உங்கள் EasyVote அட்டை இல்லாமலும் கூட நீங்கள் வாக்களிக்க முடியும், ஆனால் அதற்கு அதிக நேரமெடுக்கலாம்.

தேர்தல் நாள் உட்பட, நீங்கள் செப்டம்பர் 10 ஞாயிற்றுக்கிழமைக்கு பிறகு பதிவு செய்தால், உங்கள் EasyVote அட்டையை நீங்கள் பெற மாட்டீர்கள். நீங்கள் ஒரு சிறப்பு வாக்கைப் பதிவு செய்ய வேண்டியிருக்கும், அதற்கு அதிக நேரமெடுக்கும்.

| | |
|---|---|
| **வாக்களிப்பு தொடங்கும் நேரம்:** | அக்டோபர் 2 திங்கள்கிழமை காலை 9 மணி |
| **வாக்களிப்பு முடியும் நேரம்:** | தேர்தல் நாளாகிய அக்டோபர் 14 சனிக்கிழமை அன்று, மாலை 7 மணி |

### வாக்குச் சாவடிகள் எப்போது திறந்திருக்கும் மற்றும் அவற்றை எங்கு கண்டறிவது

பொதுத் தேர்தலில் அக்டோபர் 2 திங்கள்கிழமை முதல் தேர்தல் நாளாகிய அக்டோபர் 14 சனிக்கிழமை வரை ஏதேனும் ஒரு வாக்குச் சாவடியில் நீங்கள் பதிவு செய்து வாக்களிக்கலாம்.

தேர்தல் நாளாகிய அக்டோபர் 14 சனிக்கிழமை அன்று, அனைத்து வாக்குச் சாவடிகளும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்.

வாக்குச் சாவடிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் திறந்திருக்கும் நேரங்கள் பற்றிய தகவல்களை செப்டம்பர் மாத மத்தியில் இருந்து **vote.nz** என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைத்து அறிந்துகொள்ளலாம்.

### பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய கூடுதல் தகவல்களை எங்கு தெரிந்துகொள்ளலாம்

- **vote.nz** என்ற இணையத்தளத்திற்குச் சென்றிடுங்கள்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழைத்திடுங்கள்

உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு இந்தத் தகவல் பயனுள்ளதாக இருக்குமெனில், தயவுசெய்து இதைப் பற்றி அவர்களிடம் கூறவும்.

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய தகவல்கள் மற்ற மொழிகளிலும், அணுகக்கூடிய வடிவங்களிலும் **vote.nz** என்ற இணையத்தளத்தில் உள்ளது

# எப்படி வாக்களிப்பது

## 1 உங்கள் EasyVote அட்டையை கொண்டு வரவும்

உங்கள் EasyVote அட்டை வாக்களிப்பதை எளிதாக்குவதால், அதை உங்களுடன் எடுத்து வரவும். நீங்கள் உங்கள் அட்டையை எடுத்துவர மறந்துவிட்டால் அல்லது உங்களிடம் அட்டை இல்லாவிட்டாலும் கூட நீங்கள் வாக்களிக்க முடியும்.




## 2 வாக்குச் சாவடியில் உங்களுக்கு உதவ யாரேனும் இருப்பார்கள்

என்ன செய்ய வேண்டும் என்பதையும், எங்கு செல்ல வேண்டும் என்பதையும் உங்கள் வாக்குச் சாவடியில் உள்ள தேர்தல் பணியாளர்கள் உங்களுக்குக் காண்பிப்பார்கள்.



## 3 பொதுத் தேர்தலில் வாக்களித்தல்


ஒரு பொதுத் தேர்தலில், உங்களுக்கு இரண்டு வாக்குகள் இருக்கும் – கட்சி வாக்கு மற்றும் வாக்காளர் தொகுதி வாக்கு

### உங்கள் கட்சி வாக்கு

உங்கள் கட்சி வாக்கு என்பது நீங்கள் ஆதரவளிக்க விரும்பும் கட்சிக்கானது ஆகும்.

இந்த வாக்கானது நாடாளுமன்றத்தில் ஒவ்வோர் அரசியல் கட்சியும் பெறுகின்ற இடங்களின் மொத்த எண்ணிக்கையைப் பெரிதும் தீர்மானிக்கின்றது. கட்சி வாக்கில் அதிகப் பங்கைப் பெறும் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெறும்.

நீங்கள் பொது வாக்காளர் பட்டியலில் இருந்தாலும் அல்லது மாவோரி பட்டியலில் இருந்தாலும் அதே அரசியல் கட்சிகளின் பட்டியலில் இருந்து நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.





உங்கள் வாக்குச் சீட்டில், நீங்கள் விரும்பும் அரசியல் கட்சியின் பெயருக்கு அருகில் ஒரு டிக் குறி இடவும்.

### உங்கள் வாக்காளர் தொகுதி வாக்கு

உங்கள் வாக்காளர் தொகுதி வாக்கு என்பது நீங்கள் வசிக்கும் பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினராக (எம்.பி.) இருக்க நீங்கள் விரும்பும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கானது ஆகும்.


உங்கள் வாக்காளர் தொகுதியில் அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் உங்கள் வாக்காளர் தொகுதி எம்.பி. ஆகிடுவார். அவர் நாடாளுமன்றத்தில் உங்கள் உள்ளூர் பகுதியின் பிரதிநிதியாகச் செயல்படுவார்.

நீங்கள் மாவோரி பட்டியலில் இருந்தால், மாவோரி வாக்காளர் தொகுதியில் நிற்கும் வேட்பாளருக்காக நீங்கள் வாக்களிப்பீர்கள்.




நீங்கள் பொதுப் பட்டியலில் இருந்தால், பொது வாக்காளர் தொகுதியில் நிற்கும் வேட்பாளருக்காக நீங்கள் வாக்களிப்பீர்கள்.


உங்கள் வாக்குச் சீட்டில், உங்கள் உள்ளூர் பகுதியின் பிரதிநிதியாகச் செயலாற்ற நீங்கள் அதிகம் விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு அருகில் ஒரு டிக் குறி இடவும்.




கட்சி வாக்குகளின் இந்த விகிதம் =
நாடாளுமன்றத்தில் அதே விகிதாச்சாரத்தில் இடங்கள்

## 4 உங்கள் வாக்குச் சீட்டை வழங்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் போடவும்

அவ்வளவு தான் –
நீங்கள் வாக்களித்து விட்டீர்கள்!




## வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியவில்லையா?

உடல்நலக் குறைவு, வயது அல்லது உடற்குறை காரணமாக நீங்கள் வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியவில்லை எனில், வாக்களிக்க நீங்கள் உதவி பெறலாம். **vote.nz** என்ற இணையத்தளத்தில் கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ளவும் அல்லது உங்களுக்குள்ள விருப்பத்தெரிவுகள் பற்றிப் பேசுவதற்கு **0800 36 76 56** என்ற எண்ணைத் தொடர்புகொள்ளவும்.

நீங்கள் பராமரிப்பு இல்லத்தில் இருந்தால், வாக்களிக்கும் சேவைகளுக்கு ஏற்பாடு செய்ய உங்கள் உள்ளூர் வாக்காளர் தொகுதி மேலாளர் உங்கள் பராமரிப்பு இல்லத்தை தொடர்புகொள்வார்.

நீங்கள் மருத்துவமனையில் இருப்பதனால் வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியவில்லை எனில், அக்டோபர் 2 திங்கள்கிழமை முதல் ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்களுக்கு உங்கள் வாக்குச் சீட்டுகளைக் கொண்டுவரலாம்.

## வெளிநாட்டில் இருந்து வாக்களித்தல்

நீங்கள் வெளிநாட்டில் இருந்து வாக்களிப்பதாக இருந்தால், நீங்கள் கட்டாயமாக அக்டோபர் 13 வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குள் பதிவு செய்திருக்க வேண்டும். நீங்கள் **vote.nz** இணையத்தளத்தில் உங்கள் விவரங்களைப் பதிவு செய்யலாம் அல்லது நிகழ்நிலைப்படுத்தலாம்

வெளிநாட்டில் இருந்துகொண்டு செப்டம்பர் 27 புதன்கிழமை முதல் அக்டோபர் 14 சனிக்கிழமை மாலை 7 மணி வரை (நியூசிலாந்து நேரம்) நீங்கள் வாக்களிக்கலாம்.

வெளிநாட்டில் இருந்து வாக்களிக்க எளிமையான மற்றும் விரைவான வழி, உங்கள் வாக்குச் சீட்டை பதிவிறக்கம் செய்து, அதை பூர்த்தி செய்து, பின்னர் அதை **vote.nz** இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்வதாகும்

**வெளிநாட்டில் இருந்து தொலைபேசி:** +64 9 909 4182
(சர்வதேச அழைப்புக் கட்டணங்கள் பொருந்தும்)

**நியூசிலாந்தில் இருந்து தொலைபேசி:** 0800 36 76 56

## உங்கள் வாக்குச் சீட்டுகளைப் படிக்க அல்லது குறியிட உங்களுக்கு உதவி தேவையா?

உங்கள் வாக்குச் சீட்டைப் படிக்க அல்லது குறியிட ஒரு நண்பர், குடும்ப உறுப்பினர் அல்லது வாக்குச் சாவடி அதிகாரி உங்களுக்கு உதவலாம். அந்த நபர்:

- உங்களுடன் வாக்களிக்கும் திரைக்குப் பின்னால் செல்லலாம்
- வாக்குச் சீட்டில் உள்ள வார்த்தைகளையும் தகவல்களையும் வாசித்துக் காட்டலாம்
- நீங்கள் கேட்டுக்கொண்டால் உங்களுக்காக வாக்குச் சீட்டில் குறியிடலாம்.

பொதுத் தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என அவர்கள் உங்களுக்குச் சொல்ல முடியாது.

நீங்கள் பிறரின் உதவியின்றி உங்கள் வாக்குச் சீட்டில் குறியிட முடியாத அளவுக்கு பார்வையற்றவராகவோ, பகுதியளவு பார்வையற்றவராகவோ அல்லது உடற்குறை கொண்டவராகவோ இருந்தால், தொலைபேசி வாயிலான குரல் சேவையைப் பயன்படுத்தி நீங்கள் வாக்களிக்கலாம்.

இந்தச் சேவையைப் பயன்படுத்த நீங்கள் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்ய **0800 028 028** என்ற எண்ணை அழைத்து விருப்பத்தேர்வு 1-ஐத் தேர்ந்தெடுக்கவும்.

செப்டம்பர் 11 திங்கள்கிழமை முதல் அக்டோபர் 14 சனிக்கிழமை நண்பகல் வரை நீங்கள் பதிவு செய்யலாம்.

இந்தச் சேவை பற்றிய கூடுதல் தகவல்களை அறிந்துகொள்ள **vote.nz** இணையத்தளத்திற்குச் செல்லவும்.